ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1802/20 - 2013 මාර්තු මස 22 වැනි සිකුරාදා - 2013.03.22

*1802/20 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண சபை**

*தகனசாலைகள் பற்றிய துணை விதிகள்*

**மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்டகோறளே பிரதேச சபையின் துணைவிதிகள்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படக்கூடிய மேற்குறித்த சட்டத்தின் 126 ஆவது பிரிவின் (VII) உப பிரிவின் (ஏ) பந்தியின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் 1 (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 123 வகுதியின் (1) ஆவது உப பிரிவின்கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாண உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரான சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் கடவத்சத்தர கோறளே பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.*

*சரத் ஏக்கநாயக்க,*
*முதலமைச்சரும்*
*உள்ளூராட்சி விடயப் பொறுப்புஅமைச்சரும்,*
*மத்திய மாகாணம்.*

*மத்திய மாகாண சபையின் முதலமைச்சர் அலுவலகம்,*
*கண்டி,*
*2013, சனவரி 08.*

**தகனசாலைகள் பற்றிய துணை விதிகள்**

*மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்டகோறளே பிரதேச சபையின் துணைவிதிகள்*

*1. இந்தத் துணைவிதிகள் மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்டகோறளே பிரதேச சபைக்குச் சொந்தமான தகனசாலைகளை நடத்திச் செல்லும், அவற்றை நெறிப்படுத்தும், பரிசீலனை செய்யும், கட்டணங்கள் அறவிடும் துணைவிதிகள் என அழைக்கப்படும்.*

*2. இந்த துணை விதிகள் மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்டகோறளே பிரதேச சபைக்குச் சொந்தமான தகனசாலைகளைப் பயன்படுத்துதல், நிர்வகித்தல் அவற்றைப் பயன்படுத்துவதற்கான கட்டணங்களைத் தீர்மானித்தல், அறவிடுதல் என்பவற்றுக்காக விதிக்கப்படுகின்றன.*

*3. தலைவர், அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு அலுவலர் மூலமாக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றிப் சபைக்குச் சொந்தமான தகனசாலையொன்றில் எந்தவொரு இறந்த உடலையோ, உடலின் பகுதியையோ பாகங்களையோ அல்லது மனித முளையத்தையோ தகனம் செய்தல் கூடாது.*

4. மூன்றாவது துணை விதிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற விண்ணப்பிக்கும் ஒருவர் "அ" அட்டவணையில் தரப்பட்டுள்ளதற்கிணங்கத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பின்வரும் ஆவணங்களுடன் தலைவரிடம் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) விண்ணப்பிப்பவர் இறந்தவரது உறவினர் என்பதை உறுதிப்படுத்தக்கூடிய ஒரு ஆவணம், (இறந்தவரது வதிவிட கிராம அலுவலர் அல்லது பிரதேச சபையின் கௌரவ உறுப்பினர் ஒருவர் மூலம் வழங்கப்பட்ட சான்றிதழ் இதற்கெனப் போதுமானது, விண்ணப்பிப்பவரது பிறப்புச் சான்றிதழ், விவாகச் சான்றிதழ் போன்ற ஆவணங்களை அடிப்படையாக வைத்து இறந்தவரது உறவை உறுதிப்படுத்தும் சான்றிதழேனும் போதுமானது).

(ii) விண்ணப்பிப்பவரது தேசிய அடையாள அட்டையின் போட்டோ பிரதி அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் பிரதியொன்று விண்ணப்பிப்பவரது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தப் போதுமானது.

(iii) 1975 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க விவாக, பிறப்பு, இறப்பு (திருத்தப்பட்ட) சட்டத்தின் திருத்தப்பட்ட பிறப்பு, இறப்புகளைப் பதிவு செய்யும் கட்டளைச் சட்டத்தின் 110 ஆவது அத்தியாயத்தின் 11 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பிறப்பு, இறப்புப் பதிவாளர் மூலம் வழங்கப்பட்ட இறப்புச் சான்றிதழில் அம்பிட்டிய மெத்தேபத்தன பிரதேச சபையின் தகனசாலையில் தகனம் செய்யப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) இறந்தவரது இறப்பு தொடர்பில் குற்றவியல் நீதி விசாரணையின் கீழ் விசாரணைகள் நடத்தப்படுவதாயின், விசாரணை செய்த நீதிபதி அல்லது மரண விசாரணை அதிகாரி பிறப்பு, இறப்பு பதிதல் சட்டத்தின் 41 (இ) பிரிவின் கீழ் இறந்த உடலைத் தகனம் செய்ய முடியும் என்று குறிப்பிட்டு வழங்கிய சான்றிதழ் ;

(v) இறந்தே பிறந்த உடலெனின், பிறப்பு, இறப்பு பதிவு செய்யும் சட்டத்தின் 41 (1) ஆவது பிரிவின்கீழ் வழங்கப்படும் சான்றிதழ்.

5. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை தலைவரிடம் கையளித்த பின், அவை கிடைக்கப்பெற்ற ஒழுங்கின்படி பதிவு செய்து கோவைப்படுத்தப்படும். அந்த ஒழுங்கின்படியே தகனம் செய்யப்படும் நேரம் தீர்மானிக்கப்படும்.

6. இறந்த உடலைத் தகனம் செய்வதற்காகப் பிரதேச சபைக்குள் எனின், 5,000 ரூபாவுக்கான கட்டணத்தையும், பிரதேச சபைக்கு வெளியில் எனின், 5,500 ரூபாவுக்கான கட்டணத்தையும், பிரதேச அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டும். கட்டணத் தொகை பிரதேச சபையின் அங்கீகாரத்துடன் காலத்துக்குக் காலம் திருத்தம் செய்யப்பட முடியும். இவ்வாறான கட்டணங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும். இந்த விபரங்கள் பிரதேச சபை அலுவலகத்திலும் தகனசாலைகளிலும் காட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

7. இறந்த உடலைத் தகனம் செய்யப் பொறுப்பேற்க முடியாதெனின், அதற்கான காரணத்தை விண்ணப்பிப்பவருக்கு எழுத்துமூலம் உடனடியாகத் தெரிவித்தல் வேண்டும்.

8. தகனம் செய்வதற்காக இறந்த உடல்கள் வாரத்தின் எந்தவொரு நாளிலும் முற்பகல் 6.00 மணி முதல் பிற்பகல் 6.00 மணி வரை மட்டுமே கையளிக்கப்படுதல் வேண்டும். அதன் பின்னர் தகனத்துக்கென அனுமதி வழங்கப்பட மாட்டாது.

9. அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பிப்பவர் இறந்த உடலைத் தகனசாலையின் பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். குறித்த நேரத்தில் இறந்த உடலைக் கையளிக்க முடியாமற்போன காரணங்களினால் ஏற்படும் நட்டங்களையும், வசதியீனங்களையும் பிரதேச சபை பொறுப்பேற்காது.

10. ஒவ்வொரு தகனசாலையிலும் தகனம் செய்யப்பட்ட ஒவ்வொரு உடலினதும் விண்ணப்பதாரியின் பெயர், முகவரி, இறந்தவரது பெயர், இறப்பதற்கு முன்னர் அவர் வசித்த இடத்தின் முகவரி, விண்ணப்பிப்பவருக்கும் இறந்தவருக்கும் இடையிலான உறவு, தகனம் செய்யப்பட்ட திகதி , நேரம் போன்ற தகவல்களை தகனசாலையின் பொறுப்பாளர் பதிவு செய்து வைத்திருத்தல் வேண்டும்.

11. உடலொன்று தகனசாலையில் தகனம் செய்யப்படும்போது இயந்திரக் கோளாறு காரணமாகத் தகனம் செய்ய முடியாது போயின், சபையின் ஆலோசனைக்கமைய உடல் பற்றிய மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள விண்ணப்பிப்பவர் இணங்குதல் வேண்டும்.

12. இறந்த உடல் தகனம் செய்யப்பட்டு 21 நாட்கள் கழிவதற்கு முன்னர் விண்ணப்பிப்பவர் அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதி அதன் அஸ்தியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். உரிய நேரத்துக்குள் பொறுப்பேற்கப்படாத அஸ்தியை எவ்வகையிலேனும் அகற்றிவிடுதல் சட்டபூர்வமானதாகும்.

13. மேலும், மெத்தேபத்தன தகனசாலையில் தகனம் செய்யப்பட்ட இறந்த உடல்களது அஸ்திகளை மெத்தேபத்தன மயானத்தைச் சுற்றிவர அமைக்கப்பட்டுள்ள மதிலின் ஒரு பகுதியில் நிர்மாணம் செய்து அதில் வைப்புச் செய்ய முடியும். இதற்கென இறந்தவரது நிழற்படத்தையும் உரிய இடத்தில் காட்சிப்படுத்த முடிவதுடன், இதற்கெனச் சபை காலத்துக்குக் காலம் தீர்மானம் செய்யும் கட்டணமொன்று அறவிடப்படவும் முடியும்.

14. தகனசாலைப் பொறுப்பாளர் அல்லது தலைவரது அனுமதியின்றித் தகனசாலையின் வளவுக்குள் நுழைவது குற்றமாகும். எனினும், இறந்த உடலொன்றைத் தகனம் செய்வதற்கான அனுமதியை வைத்திருப்பவருடன் வருபவருக்கு அல்லது வருவோருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவே கருதப்படும்.

15. தகனசாலையின் வளவுக்குள் அமைதியைக் குலைக்கும் விதத்தில் நடந்து கொள்வதும், தகனசாலையின் வளவுக்குள் அமைந்துள்ள சபையின் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பதும், தகனசாலையின் பொறுப்பாளர் அவரது உதவியாளர்களது கடமைகளில் இடையூறு விளைவிப்பதும் கூடாது. இவ்வாறான சேதங்கள் ஏற்படின், விண்ணப்பதாரி அதற்கான பொறுப்பை ஏற்றல் வேண்டும். சேதங்களை மதிப்பிட்ட பின்னர் அவற்றின் பெறுமதியை விண்ணப்பதாரி செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறும் பட்சத்தில் அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் அந்தத் தொகையை அறவிட்டுக் கொள்வது சட்டபூர்வமானதாகும்.

16. பிரதேச சபையின் எழுத்துமூல அனுமதியின்றித் தகனசாலையின் வளவை அலங்கரித்தல் கூடாது.

17. பராமரிப்புக்காகவும், திருத்தவேலைகளுக்காகவும் எப்போதேனும் தகனசாலையை மூடிவைக்கவேண்டிய ஏற்படின், அதுபற்றிய அறிவித்தலைத் தகனசாலையில் பகிரங்கமாகத் தெரியும் இடத்தில் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

18. இந்தத் துணைவிதிகளின் ஏதேனுமொன்றை மீறுவது குற்றமாகும், அதிகாரம் கொண்ட நீதிமன்றம் ஒன்று அவ்வாறான ஒருவரைக் குற்றவாளியாகக் காணும் பட்சத்தில் அதற்கான உச்ச தண்டத்தைச் செலுத்துவதற்கும், தொடர்ச்சியாக இந்தக் குற்றத்தைச் செய்துவருபவருக்கு அதுபற்றி அறிவித்த பின்னரும் அதே குற்றத்தைத் தொடர்ந்து செய்யும் ஒவ்வொரு நாளுக்கும் உச்ச அளவிலான தண்டத்தைச் செலுத்துவதற்கும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உச்ச தண்டத்தைச் செலுத்துவதற்கும் ஒருவர் உட்படுவார்.

19. இந்தத் துணைவிதிகளில் -

''சபை'' எனப்படுவது மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவிட்ட கோறளே பிரதேச சபையையும் ;

''தலைவர்'' எனப்படுவது நடைமுறை வழக்கிலுள்ள எழுத்துமூல ஏற்பாடுகளின் கீழ் மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபைக்குத் தெரிவாகும் தலைவர் அல்லது தலைவரது அதிகாரங்களையும், கடமைகளையும், கருமங்களையும் நிறைவேற்றுவதற்காக எழுத்துமூல சட்டக்கோவை ஒன்றின் அடிப்படையில் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரையும் ;

''தகனசாலைப் பொறுப்பாளர்'' எனப்படுவது தகனசாலை ஒன்றின் பொறுப்பாளராகக் கடமையாற்றுவதற்கென நியமிக்கப்பட்டுள்ள ஒருவரையும் ;

''இறந்த உடல்'' எனப்படுவது மனிதனது உயிர் பிரிந்த உடல் அல்லது இறந்த உடலின் ஒரு பகுதி அல்லது உயிரற்ற நிலையில் பிறந்த ஒரு உடலையும் குறிப்பிடும்.

சொற்கள் தொடர்பில் கருத்து பேதங்கள் ஏற்படின், இந்தத் துணைவிதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களுள் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

**அட்டவணை - "அ"**

மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபையின் தகனசாலையில் இறந்த உடலொன்றைத் தகனம் செய்வதற்கான விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பிப்பவரது முழுப் பெயர் :----.
   முகவரி :----.
   தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
   கிராம அலுவலர் பிரிவு :----.
2. இறந்தவரது பெயர் :----.

வசித்த இடத்தின் முகவரி :----.
தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
கிராம அலுவலர் பிரிவு :----.

3. விண்ணப்பிப்பவருக்கும் இறந்தவருக்கும் உள்ள உறவு :----.
4. இறப்புச் சான்றிதழின் இலக்கமும் திகதியும் :----.
5. இறப்பைப் பதிவு செய்த பதிவுக்காரரின் பெயரும், முகவரியும் :----.
6. இறப்பு நடைபெற்ற விதம் :----.
7. இறப்பு தொடர்பாக விசாரணை நடைபெற்றதாயின் அதன் திகதியும் நேரமும் :----.
8. விசாரணை செய்த அலுவலரது பெயரும் பதவியும் :-----.
9. விசாரணை அதிகாரியின் முடிவு :----.
10. இறந்த உடலைத் தகனம் செய்ய அனுமதி வழங்குகின்றாரா என்ற விவரம் :----.
11. தகனம் செய்வதற்கான திகதியும் நேரமும் :---.
12. விண்ணப்பிப்பவரின் தொலைபேசி இலக்கம் :----.

மேற்குறித்த தகவல்கள் அனைத்தும் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். தகனச் சான்றிதழ்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

..........................................................................
விண்ணப்பிப்பிப்பாளரின்
கையொப்பமும் திகதியும்.

**(அலுவலகப் பாவனைக்கு மட்டும்)**

1. அனுமதிப்பத்திரத்தை வழங்க அனுமதிக்கிறேன் / அனுமதிப்பத்திரம் வழங்குவதை நிராகரிக்கின்றேன்.

.........................
கையொப்பம்,
தலைவர்/அதிகாரம்பெற்ற அலுவலர்,
கங்கவட்ட கோறளே பிரதேச சபை.
திகதி :----.

செயலாளர்,
கங்கவட்ட கோறளே பிரதேச சபை

2. ................................... ஆம் திகதிய ................................. ஆம் இலக்கம் கொண்ட பற்றுச்சீட்டின்படி ரூபா ............................... அறவிடப்பட்டுள்ளது.

3. வேண்டுகோளை நிறைவேற்றுவதற்காக விதப்புரை செய்கின்றேன்/செய்யவில்லை.

4. விதப்புரை வழங்கப்படாததற்கான காரணங்கள்.

.........................
இலிகிதரது கையொப்பம்.

திகதி :----.

*4- 248*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.